# Prime Minister participates in G20 Extraordinary Summit on Afghanistan

October 12, 2021

## ஆப்கானிஸ்தான் விவகாரங்கள் மீதான G-20 அசாதாரண உச்சி மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்பு

**அக்டோபர் 12, 2021**

G-20 அமைப்பு நாடுகள் பங்கேற்ற ஆப்கானிஸ்தான் விவகாரங்கள் மீதான அசாதாரண உச்சி மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொளி வாயிலாக கலந்து கொண்டார். இந்த மாநாடு G-20 அமைப்புக்கு தற்போது தலைமை பொறுப்பு வகிக்கும் இத்தாலியின் தலைமையில் அந்நாட்டு பிரதமர் திரு மரியோ டிராகி தலைமையில் நடைபெற்றது.

மனித நேய சூழ்நிலைகள், பயங்கிரவாதம் தொடர்பான கவலைகள் மற்றும் ஆப்கானிஸ்தானில் மனித உரிமைகள் உள்ளிட்ட விஷயங்கள் இந்த மாநாட்டில் பரிசீலிக்கப்பட்டன.

மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆப்கானிஸ்தானில் நிலவும் தற்போதைய சூழ்நிலைகளை ஆராய இந்த மாநாட்டை கூட்டிய இத்தாலியின் முயற்சியை வரவேற்றார்.

இந்தியாவுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையேயான பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த மக்கள் உறவுகளை சுட்டி காட்டிய அவர், கடந்த இரண்டு தசாப்தங்களாக ஆப்கானிஸ்தானின் இளைஞர்கள் மற்றும் பெண்களின் திறன் மேம்பாட்டிற்காகவும், சமூக பொருளாதார வளர்ச்சிக்காகவும் இந்தியா தனது பங்களிப்பை வழங்கியிருப்பதாக தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் 500-க்கும் மேற்பட்ட வளர்ச்சி திட்டங்களை இந்தியா செயல்படுத்தி இருப்பதாகவும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

ஆப்கானிஸ்தான் மக்கள் இந்தியாவின் மீது மிகுந்த நட்புறவு கொண்டிருப்பதாகவும், பசி மற்றும் ஊட்டச்சத்து குறைப்பாட்டினால் ஆப்கானிஸ்தான் மக்கள் படும் அவதியின் வலியை ஒவ்வொரு இந்தியனும் உணர்ந்திருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

ஆப்கானிஸ்தானுக்கு மனிதாபிமான உதவிகள் உடனடியாகவும் தடை இன்றியும் கிடைப்பதை சர்வதேச சமுதாயம் உறுதி செய்ய வேண்டியத்தின் அவசியத்தையும் பிரதமர் வலியுறுத்தினார்.

ஆப்கானிஸ்தான் மண்ணில் பிராந்திய அளவிலே◌ா அல்லது உலகளாவிய அளவிலே◌ா தீவிரவாதம் மற்றும் பயங்கர வாதத்திற்கு ஆதரவான சயெல்கள் நடைப்பறொத வகையில் பார்த்துக்கெ◌ாள்ள வணே்டியத்தின் அவசியத்தையும் திரு மே◌ாடி வலியுறுத்தினார்.

பயங்கரவாத சயெல்கள், தீவிரவாத மயமாக்கல், பே◌ாதை பெ◌ாருள் மற்றும் ஆயுத கடத்தல் ஆகியவற்றிற்கு எதிரான நமது கூட்டு முயற்சிகளை மமே்படுத்த வணே்டியது மிகவும் அவசியம் என்றும் அவர் கட்டேுக்கெ◌ாண்டார். கடந்த 20 ஆண்டுகளாக பாதுகாக்கப்படும் சமூக பெ◌ாருளாதார ஆதாயங்களயைும், தீவிரவாதத்தின் பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை பாதுகாக்கும் வகையில், பணெ்கள் மற்றும் சிறு பான்மயைினரை உள்ளடக்கிய நிர்வாகம் ஆப்கானிஸ்தானில் அமயை வணே்டும் என்றும் பிரதமர் அழைப்பு விடுத்தார்.

ஐநா சபயைில் ஆப்கானிஸ்தானின் முக்கிய பங்கிற்கு ஆதரவு தரெிவித்த அவர் ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானம் 2593-இன் படி ஆப்கானிஸ்தானுக்கு G-20 நாடுகள் மீண்டும் ஆதரவு அளிக்க வணே்டும் என்றும் கட்டேுக்கெ◌ாண்டார்.

ஆப்கானிஸ்தானில் விரும்பிய மாற்றத்தை கெ◌ாண்டு வருவதை கடினமில்லாத வகையில், சர்வதசே சமூகத்தை ஒருங்கிணைத்து சயெலாற்ற வணே்டுமனெ்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

மலேும் விவரங்களுக்கு இந்த ஆங்கில சயெ்திக் குறிப்பகைக் காணவும்:

**புது தில்லி**
**அக்டே◌ாபர் 12, 2021**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.